# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் நடவடிக்கைகள்
807, அண்ணா சாலை, சென்னை-600 002
முன்னிலை: டாக்டர் (திருமதி) பீலா ராஜேஷ், இஆப,

ந.க.எண்.4002 / 2018 / பிஏ2

நாள்:03.07.2018.

பொருள்: நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - கட்டிடம் - செங்கல்பட்டு மண்டலம் - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலைநகர் நகராட்சி, செங்குன்றம் கிராமம், புல எண்கள் .477/1B, 2B மற்றும் 3B-ல் 8498.15சமீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு மனையிட ஒப்புதலும் அம்மனையில் அமையும் உத்தேச Block-I-ல் தரை+மூன்று தளங்களில் 94 குடியிருப்புகள் + 2Shops கட்டிடம் மற்றும் Block-2-ல் தரை+மூன்று தளங்களில் 224 குடியிருப்புகள் ஆக மொத்தம் 318 குடியிருப்புகள் மற்றும் 2shops கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு கட்டிட / திட்ட அனுமதி வழங்க இசைவு அளித்தல் - தொடர்பாக.

Technical Clearance issued is valid after payment of I & A charge and permission of LPA/NTDA/Registered authority.

பார்வை:

1. மனுதாரர் M/s.Arun Excello Construction LLP அவர்களின் கடிதம் நாள் .08.01.2018 மற்றும் 16.03.2018.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), செங்கல்பட்டு மண்டலம் ந.க.எண்.227/2018/செம3, நாள்.23.02.2018.
3. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:28.03.2012.
4. அரசாணை எண்.85, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:16.05.2017.
5. அரசாணை எண்.135, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:21.07.2017.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.7486/2009/பிஏ2, நாள்:16.04.2009.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.21075/2009/பிஏ1, நாள்.04.04.2012.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.12201/2017/சிபி, நாள்:28.09.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.14227/2017/சிபி, நாள்.14.12.2017.

-----

உத்திரவு:

செங்கல்பட்டு மண்டலம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலைநகர் நகராட்சி, செங்குன்றம் கிராமம், புல எண்கள் .477/1B, 2B மற்றும் 3B-ல் 8498.15சமீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு **A** முதல் **F** வரை என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலுடன், அம்மனையில் அமையும் உத்தேச Block-1 மற்றும் Block-2-ல் 318 குடியிருப்புகள் மற்றும் 2 Shops கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்களின் பரப்பளவு விபரம் கீழ்க்கண்டவாறு அமைகிறது .

..2.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

Scanned by CamScanner

மனையிடத்தின் பரப்பு - 8498.15m²

<u>கட்டிடங்களின் பரப்பளவு விபரம்:</u>

| Block | Ground Floor | | Typical Floor (First to Third) | Total | Usage |
|---|---|---|---|---|---|
| | Shop | Residential | | | |
| 1 | $97.96m^2$ 2 Shops | 1237.39 22 Units | 1342.45 X 3 = 4027.35 (24 Units X 3) = 72 | 5362.70 | 2 Shops + 94 Unit |
| 2 | - | 2162.43 | 2190.43 X 3 = 6571.29 (56 Unit X 4) = 224 | 8733.72 | 224 Unit |
| | | | **TOTAL** | **14096.42** | **318 Units + 2 Shops** |

**F.S.I Area – $14096.42m^2$**

**OSR Area – $855.83m^2$**

மேற்கண்ட உத்தேச 318 குடியிருப்புகள் மற்றும் 2 கடைகள் கொண்ட Block-1 & 2-ஆக அமையும் குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி / திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.**150/2018** என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண்.1 முதல் 4 வரையிலான 855.83சமீ பரப்புள்ள (OSR) பொது உபயோக ஒதுக்கீடு திறவிடத்தினை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும் சம்பந்தபட்ட அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.
2. சாலைக்கான இடம் மற்றும் பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
3. சாலைக்கான இடம் மற்றும் பொது ஒதுக்கீடு திறவிடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

..3.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

Scanned by CamScanner

5. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

6. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

7. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

8. The provisions in the G.O.(Ms) No.17, Housing and urban Development (UD4(3)) Department dated: 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

9. பார்வை 9-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority"

10. காப்பு காடுகளிலிருந்து 500மீ தொலைவிற்குள் மனை அமைவதால் வனத்துறையிடமிருந்து உரிய NOC பெறப்பட்டு மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே இவ்வுத்தேசத்திற்கு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களால் தொடர் அனுமதி வழங்கி ஒப்புதல் வரைபடங்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

..4.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

Scanned by CamScanner

நிபந்தனைகள் :

1. உத்தேச 318 குடியிருப்புகள் மற்றும் 2 கடைகள் கொண்ட Block-1 & 2-ஆக அமையும் குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
13. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

..5.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

Scanned by CamScanner

பார்வை 6 மற்றும் 7-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் பார்வை 3 மற்றும் 4-ல் காணும் அரசாணையின்படி உரிய மனை ஒப்புதல், நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மற்றும் பார்வை 5-ல் காண் அரசாணை மற்றும் பார்வை 9-ல் காண் கடிதத்தின்படி Shelter Fund-குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), செங்கல்பட்டு மண்டலம் அவர்களால் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), செங்கல்பட்டு மண்டலம் அவர்களை மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

<u>இணைப்பு:</u>
(3 X 4 = 12) வரைபடங்கள்

(ஒம்/-) பீலா ராஜேஷ்
நகர் ஊரமைப்பு ஆணையர்

<u>பெறுநர்:</u>
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

3/7/18
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
3/7/18

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP
Authorised Signatory

Scanned by CamScanner

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.பு.கவிதா.B.E.,M.Plan.,

ந.க.எண். 227/2018 செம3 நாள்:11.03.19

பொருள் : கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலைநகர் நகராட்சி, செங்குன்றம் கிராமம், புல எண்கள்.477/1B, 2B மற்றும் 3B-ல் 8498.15 சமீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு மனையிட ஒப்புதலும் அம்மனையில் அமையும் உத்தேச Block-1-ல் தரை + மூன்று தளங்களில் 94 குடியிருப்புகள் + 2 Shops கட்டிடம் மற்றும் Block-2-ல் தரை+ மூன்று தளங்களில் 224 குடியிருப்புகள் ஆக மொத்தம் 318 குடியிருப்புகள் மற்றும் 2 Shops கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் நடவடிக்கைகள் கடிதம் கடிதம் ந.க.எண்.4002/2018/பிஏ2 நாள்: 03.07.2018
2. மனுதாரர் M/s.Arun Excello Construction LLP., அவர்கள் விண்ணப்பம் நாள் : 08.01.2018 மற்றும் 16.03.2018.
3. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் கடிதம் ந.க.எண்.227/2018/செம3, நாள்.23.02.2018. (நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது)
4. ஆணையாளர், மறைமலைநகர் நகராட்சி கடிதம் ந.க.எண். 2974/2018/அ1 நாள்:04.09.18-(OSR ஒப்படைப்பு தானப்பத்திரம் எண்.9332/2018 நாள்.03.08.2018 நகர மன்ற தீர்மானம் எண்.455/2018 நாள்.14.08.2018.)
5. அரசாணை (நிலை) எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற துறை, நாள் : 04.06.2004
6. அரசாணை எண். 86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் நாள் :28.03.12
7. அரசாணை எண். 85, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 16.05.2017.
8. அரசாணை எண். 53, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 16.04.2018.
9. அரசாணை எண். 135, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 21.07.17
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/09/பிஏ2, நாள் : 16.04.2009
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/09/பிஏ1, நாள் : 04.04.2012
12. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.28.09.2017.
13. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14227/2017/சிபி, நாள்.14.12.2017.
14. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்: 12.07.2018 (நன்னிலை வரி, I & A கட்டணம் Tamilnadu Shelter Fund (ம) CCC கட்டணங்கள் செலுத்தக் கோரப்பட்டது)
15. மனுதாரர் M/s.Arun Excello Construction LLP., அவர்கள் கடிதம்

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

Scanned by CamScanner

நாள் 15.03.2019 (நன்னிலை வரி, I & A கட்டணம் Tamilnadu Shelter Fund (ரூ.100/-க்கான உறுதிமொழி பத்திரம் (ம)CCC கட்டணம் செலுத்தப்பட்ட நாள். 13.07.2018

16. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.10.12.2018. (காப்பு காடுகள் குறித்து தடையின்மைச் சான்று) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு முகவரியிட்டது.
17. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22959/2018/பிஏ2 நாள்.28.02.2019.
18. அரசாணை (நிலை) எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் : 04.05.17.

-----

**உத்தரவு :**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலைநகர் நகராட்சி, செங்குன்றம் கிராமம், புல எண்கள்.477/1B, 2B மற்றும் 3B-ல் 8498.15 சமீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு A முதல் F வரை என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலுடன், அம்மனையில் அமையும் உத்தேச Block-1-ல் தரை + மூன்று தளங்களில் 94 குடியிருப்புகள் + 2 Shops கட்டிடம் மற்றும் Block-2-ல் தரை+ மூன்று தளங்களில் 224 குடியிருப்புகள் ஆக மொத்தம் 318 குடியிருப்புகள் மற்றும் 2 Shops கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்களின் பரப்பு விபரம் கீழ்கண்டவாறு அமைகின்றது.

மனையிடத்தின் பரப்பு - 8498.15 $m^2$

<u>கட்டிடங்களின் பரப்பளவு விபரம்:-</u>

| Block | Ground Floor | | Typical Floor (First to Third) | Total $m^2$ | Usage |
|---|---|---|---|---|---|
| | Shop | Residential | | | |
| 1 | 97.96$m^2$ 2 Shops | 1237.39 22 Units | 1342.45 x 3 = 4027.35 (24 Units x 3) = 72 | 5362.70 | 2 shops + 94 Units |
| 2 | - | 2162.43 | 2190.43 x 3 = 6571.29 (56 Unit x 4) = 224 | 8733.72 | 224 Units |
| | | | Total | 14096.42$m^2$ | 318 Units + 2 Shops |

**F.S.I Area - 14096.42 $m^2$**

**OSR Area - 855.83 $m^2$**

பார்வை(1)ல் கண்ட செயலாணையின்படி, பார்வை(4)ல் காணும் கடிதம் மூலம் கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண்கள் 1 முதல் 4 முடியவுள்ள 855.83 சமீ பரப்பளவு OSR (Open Space Reservation) உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை(5, 6, 8) மற்றும் (9)-ல் காணும் அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையின்படி நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி (ம)Tamilnadu Shelter Fund ஆகியவை கட்டணம் பார்வை (14)-ல் காணும் கடிதத்தின்படி இவ்வலுவலக கடிதங்கள் மூலம் கோரப்பட்டு, பார்வை(15)ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய I & A கட்டணம் ரூ. 52,97,000/-, நன்னிலை வரி ரூ.35,000/, CCC கட்டணம்

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

Scanned by CamScanner

ரூ.4,86,000/- ஆகியன பெறப்பட்டுள்ளது. பார்வை(13)ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு Tamilnadu Shelter Fund ரூ.31,000/- செலுத்துவதற்கு ரூ.100/-க்கான முத்திரைத்தாளில் மனுதாரரிடமிருந்து 02.08.2018-ல் உறுதிமொழி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தேச 318 குடியிருப்புகள் மற்றும் 2 கடைகள் கொண்ட Block-1 & 2-ஆக அமையும் குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் க.வ./ந.ஊ.இ.எண்.150/2018 என எண்ணிடப்பட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை (17)-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சிறப்பு நிபந்தனை எண்.10-ஐ நீக்கி படிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதனை தொடர்ந்து உத்தேச கட்டுமான வரைபடங்களுக்கு க.வ./ ந.ஊ.து.இ (செம) எண். 12 (அ,ஆ,இ,ஈ) /2019( 4 தாள்கள்) என எண்ணிடப் பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள் :</u>

1. சாலைக்கான இடம் மற்றும் பொது ஒதுக்கீட திறவிடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.

2. சாலைக்கான இடம் மற்றும் பொது ஒதுக்கீடு திறவிடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

4. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

Scanned by CamScanner

6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

7. The Provisions in the G.O. (Ms) No. 17, H & UD (UD4)(3), Department, dated : 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

8. பார்வை 12-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016, The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as in the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Regulatory Authority"

9. பார்வை(18)ல் காணும் அரசாணை வரிசை எண். 3-ன்படி மேற்படி மனைக்கு ரூ.1000/- கூராய்வு கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். மேலும் வரிசை எண். (9)-ன்படி "use conversion charge at the rate of 3% of the market value fixed under section 47-AA of the Indian Stamp Act, 1899 (Central Act 2 of 1899) and deposit the amount in Government head of account and grant permission carrying out the development" என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி மனையின் பரப்பிற்கு சந்தை மதிப்புப்படி (market value of land) 3% தொகையினை கீழ்கண்ட அரசுக் கணக்கில் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்படி தொகை பெறப்பட்ட விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**Head of Account :**
"0217 Urban Development - 60 other Urban Development Schemes - 800 other Receipts- AS Receipts under Land Use Conversion Charges-27 Non Taxation fees - 09 Collections"
(DPC: 0217-60-800-AS 2790)"

<u>நிபந்தனைகள்</u> :-

1. உத்தேச 318 குடியிருப்புகள் மற்றும் 2 கடைகள் கொண்ட Block-1 & 2-ஆக அமையும் குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

Scanned by CamScanner

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9. அரசாணை எண். 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் : 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U"Trap அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு (ம) இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

13. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெறியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன் மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்பு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

ஆணையாளர், மறைமலைநகர் நகராட்சி அவர்கள் இறுதி உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்குமாறு ஆணையாளர், மறைமலைநகர் நகராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11/3/19

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு.

4/3/19

இணைப்பு : ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் - 2 தொகுப்புகள்
(4x2= 8)

பெறுநர் : ஆணையாளர்,
மறைமலைநகர் நகராட்சி,
செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் : M/s.Arun Excello Construction LLP.,
"Bhattad Tower", No. 18, West Cott Road,
Royapettah, Chennai – 14.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

Scanned by CamScanner

## மறைமலைநகர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
**முன்னிலை : திருமதி. வ. விஜயகுமாரி. பி.ஏ.,**

சி.க.உ.எண். 02/2019 நாள். 25.03.2019.
ந.க. எண். 2794/2018/அ1

பொருள்: மறைமலைநகர் நகராட்சி – செங்கல்பட்டு வட்டம் – செங்குன்றம் கிராமம் நில அளவை எண். 477/1பி,2பி மற்றும் 3பி–ல் 8498.15 சதுர மீட்டர் மனையிடத்திற்கு ஒப்புதலும் அம்மனையில் அமையும் பிளாக்–1ல் தரை + மூன்று தளங்களில் 94 + 2 கடைகள் மற்றும் பிளாக் –2ல் தரை + மூன்று தளங்களில் 224 குடியிருப்புகள் (318+2 கடைகள்) கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. M/s.Arun Excello Construction LLP, என்பவரின் மனு நாள். 13.07.2018.
2. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.227/2018/செம3 நாள். 11.03.2019.
3. இவ்வலுவக நகரமைப்பு ஆய்வாளர் அவர்களின் ஆய்வு குறிப்பு நாள்.22.03.2019.
4. இவ்வலுவலக செலுத்துச் சீட்டு எண். 020/01/3/18–19/001576,1577 மற்றும் 1578 நாள். 25.03.2019.

*****

***உத்திரவு***

பார்வை – 1ல் காணும் மனுதாரர் M/s.Arun Excello Construction LLP என்பவர் மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட செங்குன்றம் கிராமம் நில அளவை எண். 477/1பி,2பி மற்றும் 3பி–ல் 8498.15 சதுர மீட்டர் மனையிடத்திற்கு ஒப்புதலும் அம்மனையில் அமையும் பிளாக்–1ல் தரை + மூன்று தளங்களில் 94 + 2 கடைகள் மற்றும் பிளாக் –2ல் தரை + மூன்று தளங்களில் 224 குடியிருப்புகள் (318+2 கடைகள்) கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுவதற்கு அனுமதி கோரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் செங்கல்பட்டு அவர்களுக்கு விண்ணப்பித்ததில், பார்வை 2ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண். 227/2018/செம3 நாள். 11.03.2019–ன்படி உத்தேச 318 குடியிருப்புகள் மற்றும் 2 கடைகள் கொண்ட பிளாக் 1 மற்றும் பிளாக் 2 குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் க.வ/ந.ஊ.இ.எண்.150/2018 என எண்ணிடப்பட்டு இசைவு அளிக்கப்பட்டதனை தொடர்ந்து உத்தேச கட்டுமான வரைபடங்களுக்கு **கவ/நஊதுஇ(செம)எண். 12(அ,ஆ,இ,ஈ)/2019(4 தாள்கள்)** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பார்வை 3ல் காணும் இவ்வலுவலக நகரமைப்பு ஆய்வரின் குறிப்பின்படி, கட்டிட அனுமதிக்கான கட்டணங்கள் பார்வை 4ல் காணும் இவ்வலுவலக செலுத்து சீட்டின்படி வசூலிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வுத்தரவு கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட செங்குன்றம் கிராமம் நில அளவை எண். 477/1பி,2பி மற்றும் 3பி–ல் 8498.15 சதுர மீட்டர் மனையிடத்திற்கு ஒப்புதலும் அம்மனையில் அமையும் பிளாக்–1ல் தரை + மூன்று தளங்களில் 94 + 2 கடைகள் மற்றும் பிளாக் –2ல் தரை + மூன்று தளங்களில் 224 குடியிருப்புகள் (318+2 கடைகள்) கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது. இந்த அனுமதியானது **25.03.2019 முதல் 24.03.2022 ம் தேதி வரை மூன்று ஆண்டுகளுக்கு மட்டும்** செல்லத்தக்கதாகும்.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP
Authorised Signatory

Scanned by CamScanner

# நிபந்தனைகள்

அ) நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ,செங்கல்பட்டு அவர்களின் உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

1) உத்தேச கட்டுமானத்திற்கு Solar Water Healing System அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2012-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண்:341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12) To obtain consent of TNPCB under water (Prevention & Control of Pollution) Act, 1974 as amended and the Air (Prevention & and control of Pollution|) Act, 1981 as amended.

13) Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer Associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction. மேலும்

ஆ) தமிழ்நாடு தீயணைப்பு துறையின் தடையில்லாச் சான்று பெற்று இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த பின்னரே தங்களுடைய கட்டிடம் கட்டும் பணியினை துவங்கப்பட வேண்டும்.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP
Authorised Signatory

Scanned by CamScanner

இ) தங்களால் வழங்கப்பட்ட நில உரிமை ஆவணங்கள், கட்டிட உறுதி சான்றுகள் மற்றும் வரைபடங்களின் அடிப்படையில் இக்கட்டிட அனுமதி வழங்கப்படுகிறது.

ஈ) நில உரிமை அல்லது கட்டிடத்தின் உறுதி தன்மையில் பின்னர் ஏதேனும் குறைபாடுகள் கண்டறிபப்பட்டால் அதற்கு தாங்களே முழுப் பொறுப்பாவீர்கள் எனவும், மேற்படி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இந்த கட்டிட அனுமதி செல்லாததாகிவிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

25/3/19
ஆணையர்
மறைமலைநகர் நகராட்சி

25/3/19

பெறுநர் :
M/s.Arun Excello Contruction LLP,
Bhattad Tower No.18, West Cott Road
Royapettah, Chennai-600 014.

நகல் :
நகரமைப்பு ஆய்வர் - கட்டிட விதிகள் , நிபந்தனைகள் முறையாக பின்பற்றப்படுவதை உறுதி செய்தல் மற்றும் தொடர் நடவடிக்கைக்காக.
வருவாய் ஆய்வர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின் வரிவிதிப்பு நடவடிக்கை மேற்கொள்ள.

**For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP**

**Authorised Signatory**

Scanned by CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

## empowering your real estate decisions with smart tools



### Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

### Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

### Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

### Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

### Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate